**செய்தி வெயிடு எண்.13/2021 நாள் 21.06.2021**

**சென்னை குடிநீர் வாரியத்திலுள்ள கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகளை வாரிய மேலாண்மை இயக்குநர் திரு சா.விஜயராஜ் குமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு**

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பகுதி 1 முதல் 15 வரை மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ள தெருக்களில் அமைந்துள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை பருவமழைக்கு முன்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முழுமையாக தூர்வாருதல் மற்றும் பராமரிப்பு பணிகளை 21.06.2021 முதல் 30.06.2021 வரை 10 நாட்கள் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளை வாரியத்தின் 254 தூர்வாரும் இயந்திரங்கள் 142 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 54 கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் ஆக மொத்தம் 454 இயந்திரங்கள் முலம் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை அகற்றி வருகிறது.

மேற்கண்ட பணிகள் நடைபெற்று வரும் இடங்களை இன்று 21.06.2021. சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு சா.விஜயராஜ் குமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு செய்து பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கினார் தலைமை பொறியாளர் ஆர்.நரசிம்மன் மற்றும் பகுதி பொறியாளர்கள் உடன் இருந்தனர். இத்துடன் புகைப்படமும் இணைக்கப்பட்டுள்ளது

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்